

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறும் அரசு மற்றும் கழகத்தின் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி விமான நிலையம் வந்தடைந்தார். திருச்சி வந்தடைந்த முதல்வருக்கு கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி மூர்த்தி நேற்று முன்தினம் (21.01.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத் துறை அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு வணிகர் நல வாரியம் சார்பாக மறைந்த வணிகர்களின் குடும்பத்தினரான திருத்துறைப்பூண்டியைச் சார்ந்த திருமதி .ரா. பவானி, சேலத்தைச் சார்ந்த திருமதி மே. உஷா ஆகியோர்க்கு குடும்ப நல நிதி உதவித் தொகையாக தலா ரூ.3,00,000/– க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், வணிகவரித் துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், ஆகியோர் உடனிருந்தனர்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழியில்

# கேரள அரசும் யு.ஜி.சி. வரைவறிக்கைக்கு எதிராகத் தீர்மானம்!

## மாநில உரிமைகளைக் காக்க ஓரணியில் நாம் திரள்வது காலத்தின் கட்டாயம்! அமைச்சர் கோவி.செழியன் அறிக்கை!

**சென்னை, ஜன. 23-**

**“தமிழ்நாடு முதலமைச்சரின் வழியில் கேரள அரசும் UGC வரைவறிக்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. மாநில உரிமைகளைக் காக்க நாம் ஓரணியில் திரண்டு நிற்க வேண்டியது காலத்தின் கட்டாயம்!” என்று உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மக்களாட்சியையும் மாநிலங்களின் கல்வி சுயாட்சியையும் சிதைக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு எதிராக ஒன்றாக நின்று போராட வேண்டிய நேரமிது. மாநில அரசு இதுவரை உருவாக்கி வளர்த்து வைத்துள்ள பல்கலைக் கழகங்களை எல்லாம் பல்கலைக் கழக நிதி நல்கைக் குழு (UGC) வாயிலாகக் கைப்பற்றி, நமது கல்வி வளர்ச்சியைத் தடுக்க முயல்கிறது மோடி அரசு.

‘மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு உருவாக்கிய பல்கலைக் கழகங்கள் மீது மாநில அரசுக்கே எந்த உரிமையையும் கிடையாது’ எனக் கூறுவது சர்வாதிகார ஆண வம் அன்றி வேறென்ன? மாநில அரசுகளை மிரட்டிப் பார்க்கும் ஆதிக்க நடவடிக்கை இது.



**ஒன்றிய அரசின் கைப்பாவையான யு.ஜி.சி.!**

கல்வி சார்ந்த உரிமைகள் அரசியலமைப்பின் ஒத்திசைவுப் பட்டியலில் (Concurrent) உள்ள போது மாநில அரசுகளை கலந்தாலோசிக்காமல், தன்னிச்சையாக UGC அறிவிப்பை வெளியிட்டிருப்பது, அதன் அதிகார வரம்பை மீறிய அத்துமீறல் நடவடிக்கை. கல்வி சார்ந்த வழிகாட்டிகளை வழங்கக் கூடிய UGC ஒன்றிய அரசின் கைப்பாவையாக மாறியிருக்கிறது.

ஒன்றிய அரசின் UGC விதிகளை ஏற்காவிட்டால், மாணவர்கள் கஷ்டப் பட்டுப் படித்து வாங்கும் பட்டங்கள் செல்லாது; யு.ஜி.சி. திட்டங்களில் பங்கேற்க முடியாது; பல்கலைக் கழகங்களின் சட்ட அங்கீகாரம் செல்லாது என்றெல்லாம் யு.ஜி.சி. அறிவித்திருப்பது நேரடியாய் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி மீது தொடுக்கப்பட்ட போர்.

**உருட்டல் மிரட்டல்களுக்கு திராவிட மாடல் அரசு அஞ்சாது!**

மோடி அரசின் உதய் மின் திட்டத்தில் கையெழுத்திட வேண்டும் என மிரட்டியபோது முந்தைய அ.தி.மு.க. அரசு கையெழுத்திட்டது. அதன் விளைவுகளை இப்பொழுது சந்தித்துக் கொண்டிருக்கி றோம். தேசியக் கல்விக் கொள்கையில் கையெழுத்திடாவிட்டால் நிதி தர மாட்டோம் என விதிகளை வகுக்கிறார்கள்.

இந்த மிரட்டல் உருட்டல்களுக்கெல்லாம் ஒருநாளும் திராவிட மாடல் அரசு அஞ்சாது! பழைய வரலாறுகளைப் புரட்டிப் பார்ப்பவர்களுக்கு இது தெரியும்.

துணை வேந்தர் நியமனத்தில் மாநில அரசின் உரிமையை மறுப்பதோடு கல்வியாளர் அல்லாதவர்களைத் துணை வேந்தர்களாக நியமிக்கலாம் என்றும் தனது அடிப்படை கல்வித் தகுதியிலிருந்து மாறுபட்ட பாடத்தில் முனைவர் பட்டமோ அல்லது NET/ SET தகுதி பெற்றவர்களோ பேராசியர்கள் ஆகலாம் என யு.ஜி.சி. வரைவறிக்கை தெரிவித்திருப்பது கல்வித் துறையைச் சீரழித்து மாணவர்களின் கல்விக் கனவைப் பாழாக்கி விடும். இதன் ஆபத்தை உணர்ந்து தான் முதலமைச்சர் அவர்கள் இந்த வரைவறிக்கைகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் எனச் சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றினார். ஒன்றிய கல்வித்துறை அமைச்சருக்குக் கடிதமும் எழுதினார்.

**தமிழ்நாட்டின் கல்வி மீது ஒன்றிய அரசின் தாக்குதல்!**

ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த செயல் தமிழ்நாட்டின் கல்வி மீது தொடுத்திருக்கும் தாக்குதல் மட்டுமல்ல, தனித்துவமான இந்திய மாநிலங்கள் அனைத்தின் மீதான தாக்குதல். அதனால்தான் நமது முதலமைச்சர் அவர்கள், “பா.ஜ.க. அல்லாத மாநில முதல்வர்கள் தமிழகத்துடன் இணைந்து இந்த அடக்குமுறை நடவடிக்கைகளை நிராகரித்து சட்டமன்றத்தில் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும். மாநிலங்கள் ஒன்றிணைந்து, நமது கல்வி நிறுவனங்களின் மீதான மாநில உரிமையை மீட்டெடுக்க வேண்டும்” என்று கடிதம் வாயிலாக கேட்டுக்கொண்டார். அதன்படியே இன்று கேரள அரசும் UGC வரைவறிக்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. அனைத்து மாநிலங்களும் மாநில உரிமைகளை காக்க ஓரணியில் திரண்டு நிற்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

**சர்வாதிகாரச் செயலை கிள்ளி எறிய வேண்டும்!**

விஷ செடியையும், விஷம செயலையும் முளையிலேயே கிள்ளி எறிதல் அவசியம். அப்படியே மோடி அரசிற்கு உட்பட்ட UGCயின் இந்த சர்வாதிகார செயலையும் நாம் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

மாநில அரசுகளின் அதிகாரத்தை நீக்கி கூட்டாட்சிக்குக் குழி பறிக்கும் UGC வெளியிட்ட வரைவு அறிக்கையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். இதனைத் திரும்பப் பெறும் வரை திராவிட மாடல் அரசும், தமிழ்நாட்டு மக்களும் தங்களது எதிர்ப்பில் இருந்து ஒரு நொடியும் பின் வாங்க மாட்டார்கள். மாநில உரிமைகளைப் பறிக்க நினைக்கும் மோடி அரசிற்கு எதிராக ஒன்றுபடுவோம். மீட்டெடுப் போம் நமது கல்வி உரிமையை… நிலைநாட்டு வோம் மாநில சுயாட்சியை!

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### எம். கமல் - கவிஞர் வள்ளி மைந்தன் - சிட்கோ அன்வர்தீன் பங்கேற்பு!

# “மு.க. எனும் முகவரி” நூல் வெளியீட்டு விழா!

## ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. நூலை வெளியிட்டு - கவிஞர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்!

சென்னை, ஜன.23-

“மு.க.எனும் முகவரி” நூல் வெளியிட்டு விழா சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம் வளாகத்தில் நடைப் பெற்றது. கழக துணை அமைப்பு செயலாளர் திரு. வி.க .சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி நூல் வெளியிட்டு கவிஞர்களுக்கு நினைவு பரிசு வழங்கி வாழ்த்துரை வழங்கினார்.

86வது வார்டு சென்னை பெருநகராட்சி உறுப்பின் எம். கமல், கவிஞர் வள்ளி மைந்தன், தொண்டர் அணி தோழர் சிட்கோ எஸ். அன்வர்தீன் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

கவிஞர். க.ச.கலையரசன், பதிப்பாசிரியர் நிறுவனர்/ பொதுச்செயலாளர் வரவேற்புரையில் அரிமா. டாக்டர். சிந்தைவாசன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.

சு.ஞானசேகரன், கவிஞர். மீரா (எ) மீனாட்சி சுந்தரம், தொண்டரணி தோழர். சிட்கோ. எஸ்.அன்வர்தீன், கவிஞர். எடையூர். நாகராசன், கே.ஏ.நாகூர்மீரான் கவிஞர். எம்.சக்திவேல், கவிஞர். தஞ்சை ராம் கம்பர், கவிஞர். மு.தேவராசன்,

86வது வட்ட மாமன்ற உறுப்பினர். எம்.கமல் முன்னிலையில் மு.க. எனும் முகவரி நூல் வெளியிட்டு சிறப்புரையாற்றி மு.க. எனும் முகவரி நூலின் முதல் பிரதி பெற்று ழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க.நகர் சட்ட மன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி வாழ்த்துரை வழங்கினார்.

அருட்சுடர் த. சந்திரசேகர், அன்னதான சேவை செம்மல் ஜெ.முகம்மது மீராசாகிப் பி.ஏ., கொள்கை ஒளி கவிஞர். ம.வள்ளிமைந்தன், பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், (தலைவர்பன்னாட்டு தமிழுறவு மன்றம்), கவிஞர் தமிழ் அமுதன், (நிறுவனர் தலைவர் தமிழ்நாடு திரைப்பட பாடலாசிரியர்கள் சங்கம்),

அரிமா மு.ஞானமூர்த்தி (தலைவர் உலகத்திருக்குறள் கூட்டமைப்பு)

தமிழ்ச்செம்மல் நந்திவரம். பா.சம்பத்குமார் (நிறுவனர் தலைவர் தேடல் களம் அறக்கட்டளை) , கவிஞர். சி.கருணாகரன் (ஆசிரியர், சமத்துவ குரல் மாத இதழ்),

பி.வி.மூர்த்தி, எச்.பீர்முகம்மது (மு.ந.ம.உ), த.கண்ணபிரான், திருமதி. பொற்கொடி கண்ணபிரான், மா.ம.உ. கோ.ஏழுமலைராசன், கவிஞர், இரா.செல்வம் (அத்திப் பட்டு), கவிஞர் கு.தனுஷ்கோடி, கவிஞர் குணசக்கரவர்த்தி, கவிஞர். நா.கிருஷ்ணராசு, கவிஞர். கோ.தயாளன், கவிஞர் க.எ.பொன்னுரங்கம்,

விழுதுகள், செ.அய்யா பிள்ளை, ஜெ.சிக்கந்தர், எம்.ஐ.காதர், பி.வி.கருணாகரன், எம்.மீரான், இ.பாருக், எம்.தாமோதரன், வி.மைக்கேல் ஜெபராஜ், ஆ.ஆதம், சி.சதக்கத்துல்லா, லா.மரிய கலைச்செல்வன், ப.ரூபன் குணசேகரன், து.எழிலரசன், பி.வீரப்பன், ஜி.எஸ்.எஸ். ரவி, புரட்சிகுமார், க.உசேன் முகம்மது, கவிஞர். தூரல் லோகநாதன், த.தேன்ராசா, டி.என்.பீர்முகம்மது, தி.சத்தியநாராயணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா ஏ.வி. சுப்பிரமணியன்

### சனவரி 23 (2014)



**தஞ்சை மண்டலத்தில் கழகம் வளர்க்கப் பாடுபட்டவர். மதுக்கூர் ஒன்றியச் செயலாளராக 27 ஆண்டுகள் பணியாற்றி, ஏராளமான கழகத் தோழர்களுக்கு தோன்றாத் துணையாய் நின்று பாடுபட்டவர்.**

**11வது கழக அமைப்புத் தேர்தலில் தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றியவர். பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் இருந்தவர்.**

**ஆலத்தூர் ஊராட்சித் தலைவராகவும், மதுக்கூர் ஒன்றியப் பெருந்தலைவராக இரண்டு முறையும், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.**

**‘மிசா’ சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்ததுடன், கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

---

# திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் தெருமுனை பிரச்சாரம்!

## வலங்கைமான் வீ.அன்பரசன் - பா.சிவநேசன் பங்கேற்பு!

திருவாரூர்,ஜன-23

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் வலங்கைமான் ஒன்றியம் மற்றும் பேரூர் பகுதிகளில் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் வீ.அன்பரசன் ,பேரூர் செயலாளர் பா.சிவநேசன் மற்றும் இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் எண்கண்.சா.மணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின் படியும் , மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ.ஆலோசனைகளின் படியும் திருவாரூர் மாவட்டஇலக்கிய அணியின் சார்பில் மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் தெருமுனை பிரசாரங்கள் நடைபெற்று வருகிறது.

மண்ணின் மைந்தர் கலைஞர் அவர்களின் நூறாண்டு நிறைவு, திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள், துணை முதல்வர் உதயநிதி அவர்களின் பிறந்தநாள் ஆகியவற்றை முன்னெடுத்து நடைபெறும் இந்த பிரசாரம் வலங்கைமான் ஒன்றியம் மற்றும் பேரூர் பகுதிகளில் நடைபெற்றது. பிரசாரக்கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் வலங்கைமான் வீ.அன்பரசன், பேரூர் செயலாளர் பா.சிவநேசன் உள்ளிட்டோர் பங்கேற்று தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினர். மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் எண்கண். மணி, துணைத் தலைவர் கு.தியாகராஜன், துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், தங்க குணசேகரன், நல்லாசிரியர் செல்லத்துரை, பாலமுத்து, இளம்பேச்சாளர் செல்வி.கனிமொழி ஆகியோர் பங்கேற்று பிரச்சாரம் மேற்கொண்டனர்.

---

### டி.ஆர்.பாலு எம்.பி.– அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் நகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## நகரச் செயலாளர் கே.சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன. 23 -

குன்றத்தூர் நகரச் செயலாளர்கே.சத்தியமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று ( 23.1.2025) மாலை 4 மணியளவில் அறிஞர்அண்ணாதிரு மணமண்டபம்குன்றத்தூரில் நடைபெறுகிறது. இக் கூட்டத்திற்கு நகர அவைத் தலைவர்எம்சங்கர்தலைமை வகிக்கிறார்.

நகரக் கழக செயலாளர், கோ.சத்தியமூர்த்தி வரவேற்றார். டி.கே.குமாரசாமி, டி. எஸ்.கலைச்செல்வன், கே. கே.ராஜமாணிக்கம்,ஆ.தமிழ் மாறன், திருநா வுக்கரசு, கே.குணசேகரன், கா.சிதம்பரம், ஜே.மணிமாறன், ஆர். கே.அபிபியூ நிஷா, என்.கந்தசாமி, டி.என்.அருள்மொழி, டாக்டர்செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் காஞ்சிபுரம்வடக்குமாவட்டக்கழகச் செயலாளர் தாமோ அன்பரசன், கழகப் பொருளாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு ஆகியோர் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில்மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்குஒன்றிய கழக செயலாளர்படப்பைஆ.மனோகரன், திருபெருமந்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், டி.எம்.உமாசங்கர், டாக்டர் பாபு தீ.வே.நமச்சிவாயம், எம்.குப்புசாமி, ஜே.முனுசாமி, டி.வி.சரவணன், கே. எஸ்.ராஜி, சையத் யூசுப், என். தீனதயாளன், எம்.முரளி, மா.அரி, எம்.பக்தவச்சலம், எம்.உமாபதி, ஜே.தயாளன், இ.பலராமன், வஜ்ரவேல், காசிநாதன், நாகேந்திரன், சி.பாபு, டி.ராஜேந்திரன், கே.ரஞ்சித்குமார், கே.தனபால் உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்கின்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.



திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் வலங்கைமான் ஒன்றியம் மற்றும் பேரூர் பகுதிகளில் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் வீ.அன்பரசன்,பேரூர் செயலாளர் பா.சிவநேசன் பங்கேற்று துவக்கி வைத்தார். மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் எண்கண். மணி, துணைத் தலைவர் கு.தியாகராஜன், துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், தங்க குணசேகரன், நல்லாசிரியர் செல்லத்துரை, பாலமுத்து, இளம்பேச்சாளர் செல்வி.கனிமொழி ஆகியோர் பங்கேற்று பிரச்சாரம் மேற்கொண்டனர்.